


# The Bible Standard

(தமிழ் வெளியீடு)

"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.

அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**

**Translated from BS 431**

பொருளடக்கம்


கனத்திற்குரிய ஊழியம் ........................... 2

நமக்கு வேண்டியவைகளையெல்லாம் தேவன் கொடுக்கிறார் ......... 6

ஞானமும் அதனால் வரும் வருத்தமும் ...... 8

கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடைதல் ..... 10

துண்டுப்பிரதிகள் சம்பந்தமாக .................. 11


BS Tamil Version - 17

# கனத்திற்குரிய ஊழியம்

***Honorable service***

**"ஒருவன் எனக்கு ஊழியம் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்: ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்," யோவா. 12 : 26.**




தன்னலமற்ற ஊழியமானது பலதரப்பட்ட ஜனங்களாலும் வர வர மென்மேலும் வெறுக்கப்பட்டு வருகிறது. ஜாதிகளும் தனி மனிதனும் தம் தம் சுயநலத்திற்காக எந்த அளவு ஒருவருக்கொருவர் வேலை செய்ய வேண்டுமோ, அவ்வளவு தான் செய்கிறார்களே தவிர மற்றபடி தன்னலமற்ற சேவையை முற்றிலும் பகைக்கிறவர்களாகத் தோன்றுகின்றனர். கூடிய மட்டில் தன் சேவையைக் குறைத்து இயன்றமட்டும் அதிக ஊதியம் பெற வேண்டும் என்ற குறிக்கோளுடன் செய்வதாகத் தெரிகிறது.

ஆனால் கிறிஸ்துவின் ஆவி இதற்கு மிகவும் நேர்மாறானது ஆகும். மனுக்குலத்தை இரட்சித்து ஆசீர்வதிக்கும் தேவனுடைய ஏற்பாட்டை பணம் இல்லாமல் விலையின்றி செய்து முடிப்பது அவருக்கு மிகவும் பிரியமானதோர் வேலையாயிருந்தது. (மத். 20 : 25-28). இதிலும் சிறந்த சேவையை வேறு எவரும் செய்ததில்லை. தன்னையே பலியாகக் கொடுத்துச் செய்த அவ்வளவு விலையேறப்பெற்ற சேவைக்கு அவருக்கு நன்றி செலுத்தாமல் அவரை நிந்தித்தார்கள். (ரோம. 15 : 1-3) **ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவன் எனக்குப் பின் செல்லக்கடவன்** என்று இயேசு சொன்னார். அதாவது அவர் சேனையில் சேர்ந்து எந்த ஊழியத்திற்கு அவர் தம்முடைய சகல சத்துவங்களையும் செலவிட்டாரோ அந்த ஊழியத்திற்கு சேனாதிபதியாகிய (அதிபதியாகிய) அவருக்குக் கீழ் மரணம் மட்டும் ஊழியஞ் செய்வதாகும். அதாவது தேவனுடைய ஏற்பாட்டின்படி சற்றும் தவறின்றி தேவனுக்கும் மனுக்குலத்துக்கும் ஊழியஞ் செய்வதேயாகும். ஆகையால் தன்னைத்தானே பலியிட்ட ஊழியத்தையே அவர் இங்கே நமக்குக் கூறுகிறார். நம்மைத் தாழ்த்தி சுயதியாகம் செய்கிற ஓர் ஊழியத்திற்கு நீ போ என்று அவர் சொல்லாமல், "நான் முன் சென்று காட்டியிருக்கிற பாதையிலே என்னைப் பின்பற்றி வா" என்று அழைக்கிறார். "நான் தாழ்மையான ஊழியத்தை வெறுக்கவில்லை. வேலைக்காரன் எஜமானிலும் பெரியவனல்ல. **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்"** (மத். 10 : 24, 25; 11 : 29, 30) என்கிறார். பெருமையான ஆவியுள்ள ஒரு மனுஷன் கிறிஸ்துவுக்குப் பின்செல்ல முடியாது. ஒருவனுடைய சிந்தையும், உணர்ச்சியும் முதலாவது சாந்தம், தாழ்மை, சாதுவான, அன்பான, குணமாக மாற வேண்டும். பெருமையும் அகம்பாவமும் வீணான சிந்தையுமுடைய ஒருவன் குணப்பட வேண்டும். குணப்பட்டு எஜமானுடைய அடிச்சுவடுகளில் பின்சென்று உண்மையுடன் உழைக்கும் பொழுது இளைப்பாறுதலும், சமாதானமும் சந்தோஷமும் உண்டாகும்.

ஊழியத்தை வெறுத்து, அதின் கட்டுப்பாடுகளிலும், அவமானமாகக் கருதப்படுகிறதிலுமிருந்து விடுதலைபெற விரும்புகிறவர்கள் மாபெரும் தவறைச் செய்கின்றனர். மரணமடைந்த பின்பும் நினைவு கூறப்படுவதற்குத் தகுதியுள்ள மனிதர், (ஆணும் பெண்ணும்) தேவனுக்கும் தங்களது சகமனிதருக்கும் உண்மையுடன் திறமையாய் ஊழியஞ் செய்தவர்களே ஆவர். இப்பேர்ப்பட்ட மனிதர்களின் பெயர்கள்தான் சரித்திரத்திலே மகிமை நிறைந்ததாய் வந்திருக்கின்றன. சுயநலமாய் சுக போகத்தில் வாழ்ந்து மடிந்தவர்களின் பெயர்கள் பொதுவாக மறக்கப்பட்டுப் போயிற்று.

உலகத்திலே பிரகாசமான விளக்குகள் போல அவரவர் காலத்திலே துவங்கிய தேவனுடைய ஊழியக்காரரில் மோசே,

**COURTESY BY :**
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

எலியா, பவுல் முதலானவர்கள் சகல ஆபத்துக்களையும் தைரியமாய் எதிர்த்து, தேவனுடைய ஏற்பாட்டிற்கும் காரியங்களுக்கும் இசைவாய் சகமக்களின் நலனுக்காக தங்கள் ஜீவனை அர்ப்பணித்திருக்கிறார்கள். வணங்காக் கழுத்துள்ள ஏராளமான இஸ்ரவேல் ஜனங்களை நடத்திக் கொண்டு வந்ததில் மோசே என்னென்ன பாடுகள் பட்டாரென்பதை நினைத்துப் பாருங்கள். தனது சொந்த சுகத்தையும் கவனிக்காமல், சரீரத்திற்கும் மனதிற்கும் இளைப்பாறுதலின்றி, தனது முழுப் பெலத்தையும் தன் சொந்த ஜனங்களுக்கு ஊழியஞ்செய்யவே அர்ப்பணித்தார். எலியாவைப் பாருங்கள். இஸ்ரவேலில் விக்கிரக ஆராதனை செய்தவர்களுக்காக, சுகதியாகஞ்செய்து, எவ்வளவு அக்கறையும் வைரக்கியமுங்காட்டி, 450 பாகாலின் தீர்க்கதரிசிகளையும் எதிர்த்து, அவர்கள் அனைவரையும் அழித்து, பாகால் வணக்கத்தை ஒழித்து, மீண்டும் யேகோவா தேவனை தொழும் வழிபாட்டை ஏற்படுத்தினார். (1 ராஜா. 18 : 19-40). பவுல் அப்போஸ்தலனையும் கவனித்துப்பாருங்கள். (2 கொரி. 11 : 28) தான் ஏற்படுத்திய எல்லாச் சபைகளைப் பற்றிய கவலையுடன் யூதருக்குள்ளும், புறஜாதிகளுக்குள்ளும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் பாரமான வேலையை, தன் ஜீவனுக்கும் பேராபத்து விளைவித்த தீவிரமான பயங்கர எதிர்ப்புகள் மூலம் துன்புறுத்தப்பட்டும், பொதுவாக எந்த மனிதனும் விரும்பும் இளைப்பாறுதலுமில்லாமலே முடிவு பரியந்தம் ஆவலுடன் உழைத்தார். மானிடர்களின் உரிமைகள் மற்றும் சுதந்தரம் முதலியவற்றைப் பாதுகாப்பதற்காக பாடுபட்டு சுயதியாகம் செய்த சீர்திருத்தவாதிகள் மற்றும் இரத்தச் சாட்சிகள் முதலான சிறந்த முன்மாதிரி மக்களைப்பற்றி நாம் நன்கு கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட தியாக புருஷர்களில் ஜார்ஜ் வாஷிங்டனும், ஆபிரகாம் லிங்கனும் மிகச் சிறந்த புகழ் பெற்றவர்கள் ஆவர். மானிட ஜாதிகளில் ஒடுக்கப்பட்டவர்களின் அடைக்கலமாக விளங்கும்படி விஸ்தாரமான இந்த அமெரிக்கா நாட்டை பெரும் போரினால் அபாயமுண்டாக்கின சமயத்திலே ஜார்ஜ் வாஷிங்டனும், அடிமைவாழ்வில் துயரப்பட்ட நீக்ரோக்களை விடுதலை செய்து, தேசம் பிரிவினையால் சேதம் அடையாமல் ஐக்கியத்துடன் வாழப் பாடுபட்ட ஆபிரகாம் லிங்கனும் தெய்வீக பரிபாலனத்தாலே எழுப்பப்பட்ட சிறந்த தன்னலமற்ற மனிதர்கள் ஆவர்.

தேவனுடைய யுகங்களின் ஏற்பாட்டை மனதிலே கொண்டு இந்த நாட்டின் வரலாற்றை வாசிக்கிற எவரும், இந்த அமெரிக்க தேசம், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அடைக்கலமாகத் தங்கும் பத்திரமான இடமாகவும் (ஏசா. 18 : 1) சகலத்தையும் மேற்கொள்ளும் தெய்வீக சக்தியினாலே காக்கப்பட்டு. தப்பறை, சற்றேனுமின்றி, சத்தியம் தாராளமாய்ப் பரவும்படி செய்து, தேவனுடைய பிள்ளைகள் ஓரளவு மகிமையான சுதந்தர வாழ்வு அனுபவிக்கத்தக்கதாக இந்த நாட்டைத் தேவன் பாதுகாத்து நடத்தி வருகிறாரென்பதைத் தெளிவாக அறிந்து கொள்வார்கள். இருண்ட யுகங்களின் தப்பறைகளை அகற்றி தேவனுடைய வசனத்தின் சத்தியத்தைப் பிரகடனஞ்செய்யும் ஒரு அரிய பெரிய கிறிஸ்தவ சேவை இந்த நாட்டிலே ஆரம்பித்து இந்த நாட்டிலேயே மையங்கொண்டிருப்பதை நாம் மிகவும் தெளிவாகக் காண்கிறோம். இந்நாட்டு சரித்திரத்தின் ஆரம்பத்தில் இங்கிலாந்து ஏகாதிபத்தியத்தோடும், உள்நாட்டிலுள்ள பூர்வீகக் குடிகளோடும் செய்த யுத்தங்களால் ஏற்பட்ட ஆபத்தான சமயம், சிறந்த போர்வீரனும் ராஜ தந்திரியுமான ஜார்ஜ்வாஷிங்டன் தனது முழு சக்தியோடும் தேச விடுதலைப் போரில் குதித்து தன்னை அர்ப்பணித்துத் தியாகஞ்செய்தார். சகாயம் பெறுவதற்கு தேவனை நோக்கிப் பார்த்து, நாட்டு மக்களையும் அவ்வாறே செய்யுமாறு தூண்டி, கொடுமையின் வல்லமையிலிருந்து, அமெரிக்க தேசத்தினரை விடுதலை செய்யும் மானிடக் கருவியானார். (தேவன் இவரைக் கருவியாக வைத்து அவர்களை விடுவித்தார்).

## வாஷிங்டனின் உத்தமமான உயர்ந்த குணம்

நீதி நெறி தவறாத மிகவும் பலத்த நற்குணமும் நேர்மையுமுள்ளவர் வாஷிங்டன். எப்பக்கமும் பகைவரால் சூழப்பட்டு, அற்பவிஷயத்திற்கும் பொறாமை கொள்பவர் மத்தியில், ராஜ்யபார விஷயத்தில் வஞ்சகரின் சூழ்ச்சியிலும், இவரைப் பொல்லாதவரென்று பலர் பொய்ப்பிரசாரம் செய்தும், நிந்தையான சொற்களைக் கேட்டும், பிரதான சேனாதிபதியாக இருந்த இவரைப் பொய்க் குற்றச்சாட்டுகளினாலே இவருடைய விரோதிகள் இவரை வேலையினின்று நீக்கும்படி செய்த இடஞ்சல்களான துன்பங்களிலும், அவர் காண்பித்த தன்னடக்கமும், கண்ணியமான தன்னம்பிக்கையாலும், நியாயமான தனது கட்சியின் வெற்றி பற்றிய அவருடைய திடநம்பிக்கையும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களின் மனதிலே, மிகவும் கஷ்ட நஷ்டமான சமயங்களிலே ஊக்கமும் உறுதியுமான நம்பிக்கையை அளித்திருக்கின்றது.

கி.பி. 1777-78-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் அமெரிக்கா சுதந்தரப் போர் நடத்தும் பொழுது, ஜெனரல் வாஷிங்டன் இருதரம் தோல்வியுற்ற தமது படையுடன் 'போர்ஜ்' என்னும் பள்ளத்தாக்கிலே ஒரு சமயம் தங்கி இருந்தார். (அந்த இடம் பென்சில்வேனியாவில் நமது எப்பிபனி வேதாகம வீடு இருக்கும் செஸ்டர்ஸ் ஸ்பிரிங்ஸ் பக்கத்திலேயே இருக்கிறது.) போர் வீரர் அனைவரும் மிகவும் களைத்து காலில் செருப்புகூட இல்லாமல் தங்குவதற்கு வசதியுள்ள கூடாரங்கள் அதிக மில்லாமல் போதிய ஆடையும் ஆகாரமும் இல்லாமல் மிகவும் நெருக்கடியான அந்த சமயத்தில் அவர் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். பொது ஜனங்களும் இவருக்குச் சகாயம் செய்வதற்கு மாறாக இவரை ஏசிப்பேசி அவதூறு செய்தனர். நாட்டைப் பரிபாலனஞ் செய்யும் காங்கிரஸ் சபையும் பலவீனப்பட்டுப் போனதுமின்றி இவருக்கு ஊக்கமளிப்பதற்கு மாறாக அனாவசியமாக தலையிட்டு இவர் தம் கடமை களையுங் கூடச் செய்யக் கூடாதபடி இவருக்கு பற்பல தொல்லைகளைக் கொடுத்தனர். ஆனால் வாஷிங்டன் இச்சமயங்களில் ஒப்பற்ற தைரியம் காட்டி, கஷ்டப்படும் தனது போர் வீரர்களுக்காக இவர் மிகவும் அனுதாபப்பட்டு அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார். அதோடுகூட அவர் தேவனிடம் பலத்த விசுவாசமுடையவராக இருந்தார். தன்னை வழிநடத்தி சகாயஞ் செய்து ஆறுதல் அளிக்குமாறு பல மணி நேரம் அவர் தேவனை நோக்கி ஜெபித்து மன்றாடினார்.

வாஷிங்டன் மிகவும் பரிவும் இரக்க சிந்தையுமுள்ளவர், ஒரு சமயம் நோய்வாய்ப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த ஓர் போர்வீரனைச் சந்தித்து ஆறுதலளிப்பதற்கு அவன் படுத்திருக்கும் அறைக்கு ஜார்ஜ் வாஷிங்டன் சென்றார், பற்பல உத்தியோகஸ்தர்கள் தங்கும் இடங்களைக் கடந்து பின் அந்த அறைக்குப் போக வேண்டியதாயிருந்தது, வாஷிங்டன் அங்கு

வந்தபொழுது அதிகாரிகள் குடிபோதையில் ஆடிப்பாடி ஆரவாரஞ்செய்து கொண்டிருந்தனர். அவர்களை வெளிப் படையாய் நேரில் கடிந்து கொள்ளாமல், அமைதியாக, குதிங்கால் தரையில் படாமல், பாதத்தின் முன்பாகத்தாலே செருப்பு சப்தம் ஏற்படுத்தாதபடிநடந்து நோயாளி படுத்திருக்கும் அறையை அடைந்தார். சில வினாடிகளுக்குள் ஆரவார சப்தம் அடங்கி நிசப்தம் உண்டாயிற்று. அவருடைய பொறுமையும் அமைதியும் அந்த அதிகாரிகளை உணர்வுள்ளவர்களாக்கிற்று. பட்டாளத் திலுள்ள சிலர் தங்கள் குறைகளைக் கூறும்பொழுது தூஷண வார்த்தைகளையும் உபயோகித்தனர். உடனே வாஷிங்டன் கீழ் கண்டவாறு ஒரு உத்தரவு பிறப்பித்தார்.

### தூஷண வார்த்தைகள் உபயோகிப்பது பற்றி அமெரிக்க தேச சேனை வீரர்களுக்கு தலைமைச் சேனாதிபதி வாஷிங்டன் கட்டளையாவது:–

"அமெரிக்க தேச போர்வீரர்களிடம் இதுவரை கேள்விப்படாத மிகவும் மூடத்தனமான பொல்லாத தூஷணமான பேச்சும், சத்தியம் பண்ணுதலும், சபித்தலும் இப்பொழுது நடைமுறை நாகரீகமாய் ஆகி வருவது கண்டு தலைமைச் சேனாதிபதி மிகவும் துக்கமடைகிறார். அதிகாரிகள் தங்கள் செல்வாக்கினாலும் முன்மாதிரியினாலும் இதைத் திருத்தி அவர்களும் அவர்க ளுடைய போர் வீரரும் மதியீனத்தினாலும், பக்தியின்மையி னாலும் தேவனுடைய பரிசுத்த நாமத்தை அவமதித்தால் நமது படைகள்மேல் தேவனுடைய ஆசீர்வாதம் இருக்காது என்பதை உணர்வீர்களாக, மேலும் நியாய புத்தியும் நற்குணமுமுள்ள எந்த மனுஷனும் அருவருத்து வெறுத்துத் தள்ளக்கூடிய அளவுக்கு இந்தத் துர்க்குணம் அவ்வளவு இழிவும் தாழ்வுமானது."

ஜார்ஜ் வாஷிங்டன்
அமெரிக்க நாட்டு பிரதம சேனாதிபதி

## ஆபிரகாம் லிங்கனும் ஓர் உத்தம குணசாலி

சுமார் 80 ஆண்டுகளுக்குப்பின், அடிமைத்தனத் தால் நாடு தீட்டுப்பட்டு இருந்தது. கொடுமையினால் அல்லற் பட்டு ஓலமிட்ட 40 லட்ச அமெரிக்க நாட்டின் சக சிருஷ்டிகளின் அழுகுரல் சேனைகளின் கர்த்தரின் செவிகளுக்கு வந்தது. தேவன் உடனே மற்றொரு தேசபக்தனும் ராஜ தந்திரியுமான ஆபிரகாம் லிங்கனை எழுப்பினார். அவர் தனது மனதிலும் இருதயத்திலும் கொடுமைகளுக்கு ஆளானோருடைய பாரச் சுமையைத் தன்னுடையதாக ஏற்றுக்கொண்டார். தாம் தேவனை நோக்கி கெஞ்சி மன்றாடுவதுபோல தேச மக்களையும் விண்ணப்பஞ் செய்யுமாறு, அவர் வேண்டிக் கொண்டார். கஷ்டப்பட்ட தமது சகமனிதரின் நலனுக்காக அவர் தன்னையே தியாகஞ்செய்தார். அவர் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியாகி, தமது சொந்த நகரமாகிய ஸ்பிரிங் பீல்ட், இல்லி நாய்ஸ் விட்டு தலைநகரம் செல்லும்பொழுது, தனது நண்பர்களிடம் பிரியாவிடை பெற்ற சமயம் பின்வருமாறு கூறினார்:–

*"நமது முதல் ஜனாதிபதி வாஷிங்டன் மேல் விழுந்த பொறுப்பைவிட அதிகபாரமான பொறுப்பை எடுத்துக் கொண்டிருக்கிறேன். நான் மீண்டும் உங்களை எப்பொழுது காண்பேன் என்ற ஏக்கத்துடன், ஒருவேளை மறுபடியும் உங்களைக் காண மாட்டேனோ என்ற சந்தேகத்துடனும் நான் இப்பொழுது உங்களைவிட்டு பிரிந்து போகிறேன். வாஷிங்ட னுக்கு சகாயம் செய்த தேவனுடைய உதவி இன்றி நானும் ஒன்றும் செய்ய முடியாது. அவரே என்னையும் எனது சகல முடிவுகளையும் நடத்துகிறார். அவரையன்றி என்னால் எதுவும் செய்யக் கூடாது. தேவனுடைய சகாயம் இருக்கும் போது நான் ஒருபொழுதும் தவற மாட்டேன். உங்களைத் தெய்வீக பராமரிப்புக்கு விடுகிறேன். நான் உங்களுக்காகப் பிரார்த்திப்பது போல நீங்களும் எனக்காகப் பிரார்த்தியுங்கள். எனது நண்பரும் அயலகத்தாருமாகிய உங்கள் அனைவருக்கும் என் அன்பு கலந்த பிரிவு உபசாரம் வழங்குகிறேன்"* என்று கூறினார்.

அமெரிக்க நாட்டின் குழந்தைப்பருவம் போல் இந்த 1863 கி.பி. வருஷம் அதற்கு மிக முக்கியமானதோர் ஆண்டாகும். அப்பொழுது தேசம் மிகவும் கஷ்டமான பயங்கர நிலைமையில் இருந்தது. (தற்சமயம் இருப்பது அதைவிட அதிபயங்கர நிலையில் இருப்பதாகத் தெரிகிறது). அப்பொழுதும் அராஜகம் எங்கும் தாண்டவமாடிற்று. வஞ்சக சதி வேலைகள் தேசமெங்கும் பரவி இருந்தன. எகிப்தின் அடிமைத்தனக் கொடுமையினின்று இஸ்ரவேலரை விடுதலை செய்த தேவன் நம்மையும் காப்பாற்று வார் என்று நிச்சயமாய் தேவ வல்லமையை நம்பி பின்வரும் அறிக்கையை ஜனங்கள் எல்லாருக்கும் ஆபிரகாம் லிங்கன் பிரகடனம் செய்தார். "மானிட ஜாதிகளின் மேல் சர்வ வல்லமை யுள்ள தேவனுக்கு இருக்கும் அதிகாரத்தையும், நீதி நியாயமுள்ள அவருடைய ராஜ்ய ஏற்பாடுகளையும் பக்தியுடன் நன்குணர்ந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேசிய சட்டமன்ற சபையாகிய "செனட்" ராஜ்யத்தின் ஜெப நாளாகவும், தங்களைத் தாழ்த்தும் நாளாகவும் ஓர் ஏற்ற நாளைப் பிரித்து வைக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்ளுகிறது."

"தனிப்பட்ட மனிதனும் ஜாதிகளும் சகலத்தையும் கீழ்ப்படுத்தும் தேவனுடைய வல்லமையைச் சார்ந்து ஜீவிப்பதை ஒப்புக்கொண்டு தங்கள் பாவங்களையும் மீறுதல்களையும் அறிக்கை செய்து, மிகுந்த மனத் தாழ்மையுடனும் துக்கத்துடனும் உண்மையான மனஸ்தாபம் தான் நாம் இரக்கம் பெற்று மன்னிப்படையவும் வழிநடத்தும் என்று நம்பி, பரிசுத்த வேதாகமத்திலே கூறப்பட்டிருக்கின்ற மிக உன்னத சத்தியங் களை ஏற்றுக்கொண்டு தேவனாகிய கர்த்தரைத் தங்களுக்குத் தேவனாகக் கொண்ட ஜனங்கள் மாத்திரமே பாக்கியமுள்ளவர்க ளெனவும், அவருடைய தெய்வீக நியாயப்பிரமாணத்தின்படி தனிப்பட்ட ஆட்களைப் போலவே தேசங்களும் இந்த உலகத் திலே தண்டனைக்குரியவர்களாகின்றன என்றும், நாட்டை அழிக்கின்ற இந்த உள்நாட்டுப்போர் நமது துணிகரப் பாவங் களுக்கான நியாயமான தண்டனை என நாம் உணர்ந்து, ஒரு தேசமாக நாம் மனந்திரும்பி, தேசமாக சீர்திருந்தும் ஒரு தேவை யான முடிவுக்காகவே என்றும், நாம் தேவனிடமிருந்து மேன்மை யான எண்ணிறந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டவர் களாக இருக்கிறோம். சமாதானத்திலும், செல்வத்திலும், கடந்த பற்பல ஆண்டுகளாக நாம் பராமரிக்கப்பட்டு வந்திருக்கிறோம். நாம் ஜனத்தொகையிலும், செல்வத்திலும், வல்லமையிலும் வேறெந்த நாட்டையும்விட வளர்ந்தோங்கி இருக்கிறோம்.

## ஆனால் நாம் தேவனை மறந்து விட்டோம்!

சமாதானத்தில் நம்மைப் பாதுகாத்து, பலுகிப் பெருகும்படி செய்து, நமக்குப் பொருட் செல்வமும் பலமும் தந்த கிருபையின் கரங்களை, மறந்து, நமது கெட்ட இருதயத்தினால் வஞ்சிக்கப்பட்டு, வீணும் வியர்த்தமுமானவற்றைச் சிந்தித்து, நமது மேலான ஞானத்தாலும் குணத்தாலுமே இந்த

ஆசீர்வாதங்கள் உண்டாயின என வீணாக எண்ணினோம். வாழ்க்கையில் தொடர்ந்து வெற்றி கண்டதனால் உண்டான பெருமை வெறியினின்று நம்மை மீட்டு, அழிவுக்கு விலக்கி பாதுகாக்கும் தேவ கிருபையின் அவசியத்தை உணராமலும், அளவு கடந்த சுயதிருப்தியில் மயங்கி, நம்மை உண்டாக்கின தேவனை நோக்கிப் பிரார்த்திக்கவுங்கூடாதபடி அவ்வளவு பெருமையுள்ளவர்களாகி விட்டோம்.

*ஆகையினாலே, நம்மீது கோபமாயிருக்கும் தேவனுக்கு முன்பாக நாம் நம்மைத் தாழ்த்தி, நாம் ஒரு தேசமாகச் செய்த பாவங்களை அறிக்கையிட்டு, தேவன் நமக்கு இரங்கி நம்மை மன்னிக்குமாறு நாம் ஜெபிப்போமாக.*

ஆகையால் இப்பொழுது நமது தேசத்தின் மேல் சட்ட சபையின் (செனட்) வேண்டுகோளுக்கும் நோக்கத்திற்கும் இணங்கி, 1863-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 - ஆம் தேதி வியாழக்கிழமையை நமது தேசீய உபவாச நாளாகவும், ஜெப நாளாகவும், நம்மைத் தாழ்த்தும் நாளாகவும் பிரத்தியேகப் படுத்திக் கொண்டாடும்படி நாடெங்கும் பிரகடனம் செய்கிறேன். சாதாரணமான எந்த உலகப்பிரகாரமான வேலையும் அன்று செய்யாமலும், அங்கங்கேயுள்ள ஆலயங்களிலோ அல்லது வீடுகளிலோ ஒன்று சேர்ந்துகூடி அந்த நாளைக் கர்த்தருக் கென்று பரிசுத்தப்படுத்தி, அதாவது பிரத்தியேகப்படுத்தி, பக்திவிருத்திக்கானதும் இச்சந்தர்ப்பத்திற்கு உகந்ததுமான முறையில் செலவளிக்க நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இவையனைத்தையும் நாம் உண்மையுடனும் சத்தியத்துடனும் செய்துவிட்டு, தேவனுடைய பிரமாணங்களில் நமக்கு வாக்களிக்கப்பட்டவைகளை முழு நிச்சயத்தோடு நம்பி, தேச மக்களின் உண்மையான ஐக்கிய மன்றாட்டு பரலோகத்திலே கேட்கப்பட்டு இப்பொழுது பிரிவினையால் உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கும் நம் நாடு பழைய சந்தோஷமான சமாதானத் துடன் கூடிய ஐக்கியமடைந்து ஆசீர்வதிக்கப்படும் என்று நாம் பூரண நிச்சயத்துடன் நம்புகிறோம். அதற்கு சாட்சியாக நான் என் கையெழுத்திட்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் முத்திரையையும் பதிக்கிறேன். வாஷிங்டன் நகரில் கி.பி. 1863-ம் ஆண்டு, மார்ச் மாதம் 30-ம் நாளில் பிரகடனம் செய்யப்பட்டது.

ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்க ஐக்கிய நாட்டு ஜனாதிபதி.

கிறிஸ்தவ மத சம்பந்தமாக அவருடைய விசுவாசத் தின்படி லிங்கன் இவ்விதமாக கூறுகிறார்: நான் எந்த கிறிஸ்தவ மதப்பிரிவினருடனும் ஐக்கியப்பட்டதில்லை. ஏனென்றால் அவர்களின் நீண்ட சிக்கலான உபதேசங்கள், விசுவாசப்பிர மாணங்கள், அறிக்கைகள் எல்லாவற்றையும் நான் நம்புவதாக இல்லை. உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத் தோடும், முழு பலத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் நேசித்து, உன்னில் நீ அன்பு கூறுகிறதுபோல உன்னுடைய பிறனையும் நேசிப்பாயாக என்றே நியாயப் பிரமாணமும் சுவிசேஷமும் சுருக்கமாய்க் கூறுகிறதென இரட்சகர் கூறினதை தனது பலிபீடம் உள்ள முன் பகுதியில் எந்த சபை எழுதிப் போட்டிருக்கிறதோ அது தான் என் ஆலயமாகும்; எனது முழு மனதுடனும் ஆவலுடனும் நான் அதில் அங்கத்தினனாக ஆவேன்.

வாஷிங்டனும், லிங்கனும் மிகவும் உத்தம குணங் களுள்ளவர்களாகவும் தேவனுக்குப் பயபக்தியுடன் நடந்த மனிதர்களாகவும் இருந்தனர். அவர்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக பூரண பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்களா என்பது பற்றி எங்களுக்குத் தெரியாது. (2 கொரி. 5 : 17; கலா. 6 : 14, 15). அவர்கள் பரலோக ராஜ்ய சுதந்தரத்திலே சிறுமந்தை வகுப்பார்களாக, மணவாட்டியாக கிறிஸ்துவின் சரீரமாக இருப்பார்களோ என்றோ (லூக். 12 : 32); 1,44,000 (வெளி. 7 : 1-4; 14 : 1; வெளி. 19 : 7; 21 : 9-11; எபே. 1 : 22, 23; 5 : 23-33; கொலோ. 1 : 18), அல்லது முதற் பேறானவர்கள் சபையின் இரண்டாம் பாகமாகிய, மிகுந்த உபத்திரவத்திலிருந்து ஒரு வகுப்பாராக வெளிவரும், திரள் கூட்டத்தாராகவோ இருப்பார்களா எபி. 12 : 23 என்பது திட்டமாகக் கூறமுடியாது. வெளி. 7 : 9-17.

வெகு சீக்கிரமாய் வந்து கொண்டிருக்கிற (ஏற்பட்டுக் கொண்டிருக்கிற) தேவனுடைய ராஜ்யத்தில் இரண்டு பாகங்கள் இருக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. புதிய வானமாகிய பரலோகத்துக்குரியதும் புதிய பூமியாகிய பூமிக்குரிய பாகமுமான இரண்டு பிரிவுகள் இருக்கும். (ஏசா. 65 : 17; 2 பேது. 3 : 13; வெளி. 21. தேவனுடைய இராஜ்யம்.... என்ற சிறிய புத்தகத்தைப் பார்க்கவும், விரும்பியவருக்கு இது இலவசமாய்க் கொடுக்கப் படும்). சுவிசேஷ யுகத்திற்கு முன்னுள்ள காலத்து எபி. 11 : 38-40 மூப்பரான விசுவாசிகளுடன் சேர்ந்து உலகத்தில் உத்தம குணங்களுள்ளவர்களாக விளங்கிய அநேகர் பூமியிலே ஸ்தாபிக்கப்படும் தேவனுடைய ராஜ்யத்தில் தங்கள் பரிசைப் பெறுவார்கள், (மத். 6 : 10) அதாவது யோவான் ஸ்நானகன் விஷயத்தில் காண்பது போல (மத். 11 : 11).

## உண்மையான கிறிஸ்தவ ஊழியத்தை தேவன் கனப்படுத்துகிறார்

சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி, சுயவெறுப்புச் சேவையை கண்ணியமானதாகக் கருதிய அநேகர் இருந்திருக்கிறார்கள். இவர்களில் பலர் ஏறக்குறைய வெளிப் படையாக அநேகரால் அறியப்பட்டும், பலர் அறியப்படாமலும் இருந்திருக்கிறார்கள். ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்ய விரும்பினால் அவன் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான். அவருடைய ஆவியில் பங்கு பெற்று அவருடைய ஊழியத்தில் முழுமனதுடன், முழு பெலத்துடன் சுயதியாகஞ்செய்து அவரை நெருங்கிப் பின் தொடர்ந்து சீஷர்களாக இருப்பவர்களின் பரிசு ஏற்ற காலத்திலே அவருடைய மகிமையுள்ள ராஜ்யத்தில் பங்கு பெறுவதாகும். (1 சாமு. 2 : 30; மத். 10 : 32; இரண்டு வசனங் களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்).

உண்மையுள்ள தம்முடைய எல்லா ஊழியக்கார ரையும் தேவன் கனப்படுத்துவார். சிலரைத் தமது பரலோ கத்துக்குரிய பாகத்திலும் சிலரைப் பூமிக்குரிய பகுதியிலுமாக அவர்களை மேன்மைப்படுத்துவார். நமது தலைப்பு வசனம் விசேஷித்துக்காட்டுகின்ற சிறுமந்தையோவெனில் மிக உயர்ந்த சிறந்த கனத்தைப் பெறுவார்கள். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்று இயேசுவுடன்கூட அவருடைய சிங்காசனத்தில் உட்காருவார்கள். (மத். 19 : 28; 25 : 31; 1 தெச. 4 : 16, 17; வெளி. 5 : 9, 10; 20 : 4, 6).

ஆயிர வருஷ யுக ஆட்சியின் பரலோகப் பகுதியில் இவர்களுக்கு அடுத்தாற்போல் கனப்படுத்தப்படுபவர்கள் தோழி வகுப்பாராகிய திரள் கூட்டத்தாராவர். மூப்பரான பாத்திரவான்கள் கிறிஸ்துவுக்குக் கீழ் பரலோக ராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்தில் கனப்படுத்தப்பட்டு ஆட்சி செய்வார்கள். (சங். 45 : 16; ஏசா. 32 : 1; 24 : 23; லூக். 13 : 28). இவர்களின் விசேஷித்த கூட்டாளிகளாகுபவர்கள் தெரிந்தெடுப்புக்குள்ளான நான்காம் வகுப்பாராகிய "வாலிபரான விசுவாசிகள்"ஆவர். யோவே. 2 : 28-ல் கூறப்பட்டிருக்கும் வாலிபரும், 1 தீமோ. 2 : 20-ல் சொல்லப்பட்டிருக்கிற மண் பாத்திரமுமாவர். 1, 44,000 பேர் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தீர்ந்தபின் யுகத்தின் முடிவிலே பிரதிஷ்டை செய்தவர்கள்; இவர்கள் மூப்பராகிய விசுவாசி களுக்குக் குறைந்த கனமுள்ளவர்களாக, அவர்களின் உதவிக்காரராக பணியாற்றுவார்கள். இப்பொழுது பிரதிஷ்டை செய்து, உண்மையுடன் அதை நிறைவேற்றுபவர்கள், தேவனுடைய ராஜ்யத்தின் பூமிக்குரிய பாகத்திலே மிகவும் சிறப்பாகக் கனப்படுத்தப்படுவார்கள். தேவனையும், கிறிஸ்து வையும், மனுக்குலத்தை ஆசீர்வதித்து இரட்சிக்கும்படி தேவன் ஏற்படுத்தியிருக்கும் புண்ணியம் மிகுந்த யுகங்களின் ஏற்பாட்டையும் நேசித்துத் தங்கள் பற்றுதலை நிரூபிக்கிறவர்கள் தங்களுக்குரிய பரிசை இழந்து போகவே மாட்டார்கள். அப்படிப்பட்டவர்களின் மேலேயே தேவனுடைய கண்கள் இருக்கின்றன. (சங். 32 : 8). அவர்கள் வைக்கப்பட்டிருக்கின்ற விசேஷித்த சந்தர்ப்ப சூழ்நிலைகளிலும், அவர்கள் எப்படி நடக்கின்றனர் என்பதைத் தேவன் கவனித்துக் கொண்டிருக் கிறார். எவ்வளவு சிறிய அற்பமான வேலையாயிருப்பினும், தன் வேலையை உண்மையோடும் ஜாக்கிரதையோடும் செய்யும் பொழுது அவர்களை அவர் கவனிக்காது இருக்கவே மாட்டார். அவருடைய கவனத்துக்கு எதுவும் தப்பவே முடியாது. (லூக். 12 : 6-8; எபி. 6 : 10). இப்பேர்ப்பட்டவர்கள் எல்லாரும் ஏற்ற காலத்திலே அதிகமதிகமான கனத்தை அடைவார்கள். முடிவு பரியந்தம் நாம் சிலுவையைச் சுமந்தாலன்றி நாம் வெற்றிக் கிரீடத்தை எதிர்பார்க்க முடியாது. நிகழ்காலத்தை எதிர்காலத்தி லிருந்து பிரிக்கிற திரைக்கு இந்தப் பக்கத்திலே நாம் தாழ்மை யான சுயதியாகஞ்செய்யும் வழியிலே இப்பொழுது நடக்கிறோம். திரைக்கு அப்புறம் மகிமை, புகழ், சமாதானம், மகிழ்ச்சி சதாகால மும் உண்டு. இப்பொழுதுள்ள பரீட்சைகளும் ஊழியங்களும் எண்ணிக்கையிலும் கடுமையாயிருப்பதின் அளவிலும் கூடிக் கொண்டேபோகும்பொழுது, பிரியமானவர்களே உங்களுக்குத் தேவையான ஆவியின் எழுப்புதல் வேண்டுமாயின் உங்கள் மனதிலே தேவனுடைய வாக்குத்தத்தங்களைப் பதித்துக் கொள்ளுங்கள். (2 தீமோ. 2 : 3; 2 கொரி. 4 : 17, 18). ***

# நமக்கு வேண்டியவைகளை எல்லாம் தேவன் கொடுக்கிறார்

## *God Supplies All Our Need*

**"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவை எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்." பிலி. 4 : 19.**

தேவன் தம்முடைய சொந்த ஜனங்களைப் பாதுகாத்துப் பராமரிக்கிறார் என்ற உண்மையை நாம் ஒருபோதும் சந்தேகிக்கவே கூடாது. (1 தீமோ. 5 : 8). **"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்: அப்பொழுது அவர் உன் பாதைகளை எல்லாம் செவ்வைப் படுத்துவார்."** (நீதி. 3 : 6). **"கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு. அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள் செய்வார். உன் வழிகளைக் கர்த்தருக்கு ஒப்பு வித்து, அவர் பேரில் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப் பண்ணுவார். நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய வழிகளின்மேல் அவர் பிரியமாயிருக்கிறார். அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை. கர்த்தர் தம் கையினால் அவனைத் தாங்குகிறார்."** (சங். 37 : 4, 5, 23, 24). நமது அனுபவங்களில் ஏற்படும் ஒவ்வொரு சிறிய விஷயங்களையும் நம்முடைய பரம பிதா திட்டமிட்டு ஒழுங்கு செய்கிறார் என்று நாம் எண்ணலாமா என்று சிலர் கேட்கலாம். சின்னஞ்சிறு விஷயங்களில்கூட தேவன் நம்மை நடத்துகிறார் எனச் சிலர் நம்புகிறார்கள். ஆனால் இதற்கு மாறாக சிலர் அப்படி அல்லவே அல்ல என்று இதற்கு நேர் விரோதமாகச் சிந்திக்கிறவர்களாயிருக்கின்றனர். நமது கருத்து இதிலிருந்து வித்தியாசப்படுகிறது. நமது அனுபவங்கள் பலதரப்பட்டதாயும் வேறுபட்டவையுமாயிருக்கின்றன. நம்மில் வித்தியாசமான பலர் அநேக விஷயங்களை வெவ்வேறு வித்தியாசமான கோணங் களிலிருந்து நோக்குநிலைகளிலிருந்து பார்ப்பார்கள். வாழ்க்கையின் சிறு சிறு விஷயங்களிலும் தங்களை நடத்தும்படி, விபரமாகத் தெய்வீகப் பராமரிப்பைப் பொதுவாகத் தேட மாட்டார்கள். இவ்விதமாக சிறு சிறு விஷயங்களிலும் தெய்வீகப் பராமரிப்புச் செயலுக்காக மிகவும் ஜாக்கிரதையுடன் விழித்திருந் தால் இதிலும் அதிக ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பார்கள்.

தெய்வீக பரிபாலனத்தைச் சிலர் நம் வாழ்க்கையில் அளவுக்கு மிஞ்சி மிகமிக அற்ப விஷயத்திலுங்கூடக் காண்ப தாகக் கூறுவது சரியல்ல, இப்படிப்பட்டவர்கள் நடந்து செல்லும் பொழுது எதிர்பாராத வண்ணம் ஓர் தண்ணீர் குட்டையில் கால் வைக்க நேர்ந்தால், அதுவும் நிச்சயமாய் தேவனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்திருக்குமென சிலர் நம்புவார்கள். **"நல்ல மனுஷனுடைய நடைகள் கர்த்தரால் கட்டளையிடப்பட்டிருக்கிறது"** என்பது உண்மை; நாம் அதை நம்புகிறோம். ஆனால் நாம் செய்யும் ஒவ்வொரு சின்னஞ் சிறிய காரியங்களையும் நாம் நடக்கும் ஒவ்வொரு சிறிய அடிகளையும் தப்பிதமாக அடி வைத்து விட்டோமென உணர்ந்த பின்னுங்கூட அவர்தான் அதிலும் நடத்துகிறாரென எண்ணக் கூடாது. பொதுவாக தேவனுடைய பிள்ளைகளின் காரியங்கள் தேவனுடைய மேற்பார்வையின் கீழ் இருக்கிறது. **"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளையமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். உன் வழிகளி**

**லெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்."** (சங். 34 : 7; 91 : 11, 12; எபி. 1 : 14).

"**அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது**"(ரோம. 8 : 28) என்று நமக்கு நிச்சயப் படுத்தப்படுகிறது. கிறிஸ்துவின் மூலமாயும் நம்மைக் காவல் புரியும் தூதர் மூலமாயும் தேவன் சில சில சமயங்களிலே மிகவும் சின்னஞ்சிறிய நமது காரியங்களிலும் தலையிடுகிறார். (மத். 18 : 10; அப். 12 : 15). தேவனுடைய ஊழியத்திலே சிறு காரியங்களிலும்கூட நமது உக்கிராண ஊழியத்தில் நாம் உண்மையாயிருந்து, நமது காரியங்களை மிகவும் சர்வ ஜாக்கிரதையுடன் கூர்ந்து பார்த்து சகலத்திலும் விழிப்புடன் இருக்கும்படியாக தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். (லூக். 16 : 10; 1 கொரி. 4 : 2).

நாம் ஒன்றும் இல்லை; நமது தகுதி அவராலே ஆயிற்று என்ற உண்மையை நன்றாக உணர்ந்து தேவனிடத்தில் பூரண நிச்சயமான நம்பிக்கையுள்ளவர்களை நாம் வியந்து பாராட்டுகி றோம். "**நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடைய வர்களாயும் சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயு மிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்."** (2 கொரி. 3 : 5; 9 : 8) ஆகவே அவருடைய ஊழியம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மிக மிகச் சின்னஞ்சிறிய பிரச்சனையையுங்கூட நாம் அவரிடம் கொண்டு போவதைக் குறித்து தேவன் சந்தோஷமடைகிறார். நமது ஜெபங்களுக்கு உத்தரவு அளித்து கிறிஸ்து இயேசுவுக்குள் தமது ஐசுவரியத்தின் மகிமையின்படியே நமது தேவைகளை யெல்லாம் நிறைவாக்குவார்.

தம்முடைய ஜனங்களின் வழிகளைத் தனிப்பட்டவரின் விஷயத்திலும், கூட்டமாகவும் விசேஷ கவனத்துடன் நடத்துகிறார். மாம்ச இஸ்ரவேலரின் ஜீவியத்தையும் ஆவிக்குரிய இஸ்ரவே லரின் வாழ்க்கையிலும் பொதுவான அம்சங்களை அவர் திட்டஞ் செய்தார் என்பதை ஏற்கெனவே காட்டியிருக்கும் வசனங்களைத் தவிர பின்வரும் வேத வசனங்களும் காட்டுகின்றன: (உபா. 8 : 2; 23 : 4, 5; 1 சாமு. 2 : 6-9; எஸ்றா 6 : 22; சங். 37 : 17, 28, 31-33; நீதி. 2 : 7, 8; 3 : 6; 20 : 22; 24 : 16; ஏசா. 26 : 7; 30 : 21; 31 : 4, 5; 40 : 11; 52 : 12; 58 : 11; எரே. 2 : 6; 3 : 4; 24 : 5-7; 31 : 9, 10, 28; ஆமோ. 3 : 7; 9 : 14, 15; 2 கொரி. 4 : 17, 18; பிலி. 1 : 12; எபி. 12 : 9-11).

ஆபிரகாமும் சாராளும் எகிப்து, பெலிஸ்தியா முதலிய நாடுகளில் இருந்தபோது அவர்களுக்குத் தெய்வீக பராமரிப்பு இருந்தது என்பதற்குப் பல சம்பவங்களையும் வேதாகமத்தில் நாம் வாசிக்கிறோம். ஆதி. 12 : 11-20; 20; சோதோம் அழிவு சமயம் லோத்துவின் காரியத்திலும் (ஆதி. 19 : 15, 16) ஆபிரகாம் வீட்டினின்று ஆகார் தள்ளப்பட்ட சமயத்திலும் (ஆதி. 21 : 14-21) எகிப்திலே யோசேப்பு சம்பந்தப்பட்ட காரியங்களிலும் (ஆதி. 45 : 5; 50 : 20). நாம் தெய்வீகப் பராமரிப்பைக் காணலாம். மேலும் மோசேயின் குழந்தைப் பருவத்திலும், (யாத். 2 : 1-10) இன்னும் அநேக சம்பவங்களில் எகிப்தியர் கொள்ளை நோயில் அழியும்பொழுது இஸ்ரவேலர் காக்கப்பட்டதும், வனாந்திரத்தைக் கடந்ததும், கானானை ஜெயித்ததும், நியாயாதிபதிகளால் பல சமயங்களில் விடுதலை பெற்றதும், சவுல், தாவீது, எசேக்கியா, எரேமியா, பாரூக் (எரே. 36 - 38) தானியேல், யோனா, சகரியா போன்றோரின் விஷயங்களிலும் தெய்வீகப் பராமரிப்பைக் காணலாம். (லூக். 1 : 20-22, 57-64) குழந்தைப் பருவத்தில் இயேசு இருக்கும்பொழுதும், மத். 2; இன்னும் மற்ற அநேக சம்பவங்களிலும் பேதுரு, அப். 12 : 3-17; பவுலும் சீலாவும், அப். 16 : 19-31; முதலியன எதிர்கால சேவைக்கு தமது ஊழியக்காரரை ஆயத்தஞ் செய்வதில், சாமுவேல், இயேசு, பவுல் முதலானவர் வாழ்க்கையில் நாம் காண்பது போல, தெய்வீக பரிபாலனத்தால் நடத்தப்படுவதை நாம் காணக்கூடும். உதார ணமாக, லூத்தரின் இளம்பிராயத்தில் தன் வயதுப் பையன் இன்னொருவருடன் வழிப்பிரயாணம் செய்யும்பொழுது திடீரென இடிவிழுந்து அவருடன் சென்ற பையன் செத்தபொழுது லூத்தர் அதிசயமாகக் காக்கப்பட்டார். இதுபோலவே ஜான்வெஸ்லி தீப்பிடித்துக் கொண்ட மேல் மாடியில் அகப்பட்டுக் கொண்டார். இறங்கிவர ஏணி கிடையாது. ஒரு மனித ஏணி மூலம் வெஸ்லி கீழே இறங்கி தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார். இதுபோலவே ஜான் வீஸல் என்பவரைக் கொடுமையான சித்திரவதையிலிருந்து தேவன் அதிசயமாகப் பாதுகாத்தார்.

எதிர்கால ஊழியத்திற்காக தேவன் தமது பிள்ளைகளை ஆயத்தம் செய்கிறாரென்பதற்கு 'சாமுவேல் கிரோதர்ஸின்' (Samuel Crowthers) சரித்திரம் ஒரு நல்ல விசேஷித்த உதாரணமாகும். 1800 கி.பி. ஆப்பிரிக்காவிலே பிறந்தார். ஒரு ஜாதிக்கு விரோதமாக மற்றொரு ஜாதி செய்த யுத்தத்தின் பயனாக சாமுவேல் கிரோதர்ஸ் அடிமையானார். ஒரு குதிரைக்காக விற்கப் பட்டார். பிறகு ஒரு பெருங்கட்டாயிருந்த புகையிலைக் காக விற்கப்பட்டார். கடைசியாக ஒரு போர்த்துகீசிய அடிமை வியாபாரி ஒரு பீப்பாய் சாராயத்திற்கு இவரை வாங்கினான். சங்கிலிகளால் கட்டப்பட்டு பயங்கரமான நீண்ட பிரயாணஞ் செய்து கடற்கரை யை அடைந்தார். அவர் பட்ட துன்பங்களுக்கு அளவேயில்லை. பின்பு காற்றோட்டமில்லா ஒரு கப்பலின் அடித்தளத்தின் அறை யிலே நூற்றுக்கனக்கான அடிமை மக்களை மூச்சுத் திணரக் கூடிய அளவு நெருக்கமாய் அடைத்து கப்பல் அமெரிக்காவை நோக்கி அட்லாண்டிக் சமுத்திரத்தில் போய்க் கொண்டிருந்தது. ஆங்கிலேயரின் கப்பல் இக்கப்பலை மடக்கிப் பிடித்து அதிலிருந்த அடிமைகளையெல்லாம் விடுதலை செய்தனர். அதிலே சாமு வேல் குரோதர்ஸ்சும் விடுதலையானார். அவரை வேலைக்கு எடுத்தவர் அவரைக் கிறிஸ்தவனாக்கி, கல்வி கற்றுக் கொடுத்து, அவரை ஒரு பெரிய மிஷனரியாக்கிவிட்டார். இவர் தாம் பிறந்த ஆப்பிரிக்காவிற்கே போய் அங்குள்ள இனத்தாருக்கு கிறிஸ்து இயேசுவைப் பற்றி பிரசங்கம் செய்து ஒப்புயர்வற்ற அவரை நேசிக்கும்படி செய்துவிட்டார். ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கர் இச்சம்பவத்தினாலே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

தேவனுடைய பரிபாலனத்திற்கு இன்னும் ஓர் சிறந்த உதாரணம் பின்வருமாறு: சீர்திருத்தக் காலங்களிலே நடந்த சம்பவம் இது. ஜெர்மெனி தேசத்திலே 'ஷ்ற்றன்பர்க்' நகரிலுள்ள 'பிரன்டியஸ்' (Brentius) என்பவரை ரோம படை வீரர்கள் கொல்ல வேண்டுமென வந்தபொழுது, இவர் அவர்களுக்குத் தப்பி ஓடி வழியிலுள்ள ஓர் வைக்கோல் படப்புக்குள் நுழைந்து பதுங்கிக் கொண்டார். பின் தொடர்ந்து வந்த போர்வீரர்கள் தங்களுடைய ஈட்டிகளால் வைக்கோல் படப்பை அங்கும் இங்கும் குத்திக் குத்திப்

பார்த்தார்கள். இவர் தேவ பராமரிப்பால் ஈட்டி குத்துகளுக்குத் தப்பினார். வெகு நேரம் பிரயாசப்பட்டும் இவரைக் கண்டுபிடிக்கக் கூடாமல் போர் வீரர்கள் போய் விட்டார்கள். இவர் வைக்கோல் படப்பினுள் 14 நாட்கள் பதுங்கி இருந்தார். ஒவ்வொரு நாளும் ஒரு கோழி படப்பினுள் நுழைந்து இவர் கையெட்டும் தூரத்தில் ஒரு முட்டையிட்டு விட்டு போய்விடும். இவர் அந்த முட்டையை எடுத்து சாப்பிட்டு அந்த 14 நாட்களைக் கழித்தார். பின்பு அந்த கோழி அங்கு வரவில்லை. எனவே இனி நாம் இங்கிருந்து வெளியேற வேண்டிய காலம் வந்ததாக அறிந்து அவர் வெளியே வந்தபோது இவரைத் தேடிய போர்வீரர் சற்று முன்புதான் அந்த ஊரைவிட்டுப் போனார்கள் என்று அறிந்து வேறொரு பத்திரமான இடத்திற்குப் போய்விட்டார்.

நமக்கு வேண்டியவைகளையெல்லாம் (நாம் விரும்பும் அனைத்து காரியங்களையும் அல்ல) கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குகிற நமது பரம தகப்பனின் அக்கறையை தேவனுடைய ஜனங்கள் உணர்ந்து மனமகிழ்ச்சி அடைவார்களாக. அவருடைய வாக்குத்தத்தங்களை நாம் ஒருபோதும் சந்தேகிக்க வேண்டாம். ஏனெனில் "**வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே.**" **எபி. 10 : 23.**

# வேதாகம வினா பெட்டி

***Bible Question Box***

## பிரசங்கியில் சொல்லப்பட்டுள்ள ஞானமும் (அதனால் வரும்) வருத்தமும்

**கேள்வி**: பிர. 1 : 18–ல் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். "**அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு: அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்.**" ஆங்கில வேதாகமத்தில் "**அதிக ஞானத்திலே அதிக துக்கமுண்டு: அறிவு பெருத்தவன் வருத்தம் பெருத்தவன்**" என்று உள்ளது. இது உண்மையானால் ஞானத்தையும் அறிவையும் தேடாமல் அறியாமையிலே நிலைத்து இருந்துவிட்டால் அது நமக்கு நன்மை பயக்கக் கூடியதாக இராதா?

**பதில்**: மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாசகம் சரியானதே. ஏனெனில் பிரசங்கி ஆகமத்தை எழுதுவதற்கு சாலமோன் தேவ ஆவியினாலே ஏவப்பட்டிருக்கிறார் என்று பிர. 1 : 1, 12–ல் பார்க்கிறோம். அவர் அநேக நீதிமொழிகளை எழுதுவதற்கும் தேவனால் ஏவப்பட்டார். அந்த நீதிமொழிகளை நாம் வாசிக்கையில் "**ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி: என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்.**" "**முத்துக்களைப் பார்க்கிலும் ஞானமே நல்லது: இச்சிக்கப் படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல.**" "**நீதிமான்களுடைய உதடுகள் அநேகரைப் போஷிக்கும்: மூடரோ மதியீனத்தினால் மாளுவார்கள்**" என்று உள்ளது. (நீதி. 4 : 7; 8 : 11; 10 : 21). தேவனுடைய வார்த்தையானது தன்னில்தானே முரண்பாடாயிராது. இந்த இரண்டு விதமான தாற்பரியங்கள் கொண்டுள்ள வாசகங்களும் நிச்சயமாக இரு வேறு நோக்கு நிலையில் இருந்து எழுதப்பட்டிருக்கின்றன.

பிரசங்கியை எழுதுகையில் சாலமோன் ராஜா, ஆபேல் முதல் யோவான் ஸ்நானகன் வரையான ஓர் வகுப்பாகிய மூப்பரான விசுவாசிகளைத் தெளிவாக அடையாளப்படுத்துகிறார் என்பதை நம் மனதில் வைத்துக் கொண்டோமானால் காரியங்கள் தெளிவாகிவிடும். (எபி. 11; மத். 11 : 11). சாலமோனுடைய சிந்தனைகள் அவர் அடையாளப்படுத்தும் மூப்பரான பாத்திரவான்களின் சிந்தனைகளை அடையாளப் படுத்துவதாகக் காணப்படுகிறது. அவர்கள் மாயையைக் குறித்தும், வெறுமையைக் குறித்தும், ஆதாமின் பாவம் மற்றும் மரண காலத்தின்கீழ் தங்களுடையதும் மற்றவர்களுடையதுமான பல்வேறுவிதமான அனுபவங்கள் குறித்தும், ஏன் இந்த அனுபவங்கள் அனுமதிக்கப்பட்டன என்பதைக் குறித்தும் சிந்தித்தாராய்ந்தனர். அதற்கிணங்க ஏன் இத்தகைய மோசமான அனுபவங்கள் பாவத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டன என்பதற்கான ஓர் முழுமையான விடையை பிரசங்கி ஆகமம் கொடுக்க வில்லை. ஆகையால் அந்த அளவே மூப்பரான விசுவாசிகள் அதனைப் புரிந்து வைத்திருந்தனர்.

இயேசுவின் முதலாம் வருகைக்குப் பின் வந்த யூத யுக அறுவடை காலத்திலோ மேலும் நிச்சயமாகவே, (நாம் இப் பொழுது வாழும்) சுவிசேஷ யுக அறுவடை காலத்திலோ இவ்விதமாகவே இருக்கவில்லை. ஏனென்றால் இந்த விஷயம் இப்பொழுது முழுமையாக புரிந்து கொள்ளப்பட்டுவிட்டது. ஆனால் பிர. 12 : 13, 14 வசனங்களிலிருந்து நாம் பார்த்தோ மானால் மூப்பரான பாத்திரவான்கள், சாபத்தின்கீழ் மனித னுடைய அனுபவங்கள், பூமிக்குரிய காரியங்கள் மற்றும் சம்பாத்தியமும் மாயையே என்பதைப் போதிப்பதற்கும், அதன் மூலம் தேவனுக்கு பயபக்தியாயிருந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்பதையும், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே என்பதையும், கற்றுக் கொண்டு இந்த விஷயம் சம்பந்தமாக போதுமான அளவு புரிந்து கொண்டார்கள் எனப் பார்க்கிறோம்.

நமது கேள்விக்குரிய பதில் சம்பந்தமாக நாம் மேலே விளக்கப்பட்டுள்ள நோக்கு நிலையை நம் மனதில் நன்கு பதிய வைத்துக் கொள்ள வேண்டும். பிர. 1 : 18–ற்கு நம்மை வழி நடத்தும் பாகத்தைப் பார்ப்போம்: இந்த புஸ்தகத்தின் வார்த்தைக ளெல்லாம் மூப்பரான விசுவாசிகளின் போதனைகளாக முன் வைக்கப்படுகின்றன. அவர்களே தேவனுடைய பழைய ஏற் பாட்டுக் காரியங்களின் செயலாற்றும் அதிகாரிகளாக இருந் தனர். (வசனம் 1). பாவத்தின் கீழ் அவர்களைப் பொறுத்தவரை பூமிக்குரிய காரியங்களோடுள்ள அனுபவங்கள் அனைத்தும் முற்றிலும் மாயையானது என்பதே அவர்களின் போதனை களிலுள்ள முக்கியமான தாற்பரியங்களில் ஒன்றாகும். (வசனம் 2). சாபத்தின் கீழ் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையின் முடிவில் அவனுடைய பிரயாசத்திலிருந்து அவனுக்காக என்ன பலன் அடைவான் என்பதே மூப்பரான விசுவாசிகளின் சிந்தனையாகக்

காணப்படுகிறது. (வசனம் 3). அவர்கள் பூமியின் நிலைத் திருக்கும் தன்மையையும் ஒவ்வொரு சந்ததியினரின் நிலை யில்லாத் தன்மையையும் வேறுபடுத்திக் காட்டுகிறார்கள். (வசனம் 4). சூரியன் அதின் ஓட்டத்தில் தொடர்ந்து ஓடிக் கொண்டே இருக்கிறது என்றும் (வசனம் 5) காற்றுகளும் தங்களுடைய வழிகளைக் கொண்டிருக்கின்றன என்றும் (வசனம் 6) அவர்கள் கருதினார்கள். மேலும் தண்ணீரானது தனது சூழற்சி பாதையில் நீராவியாகிறது; அதுவே மேகமாகிறது; மழையைப் பொழிகிறது. அது நீரூற்றுகளிலும், ஓடைகளிலும், நதிகளிலும் ஓடி ஏரிகளிலும் சமுத்திரங்களிலும் சென்றடைந்து மீண்டும் தனது முந்தைய சூழற்சி முறையையே பின்பற்றுகிறது என்றும் கவனித்தனர். (வசனம் 7).

கண்டும் கேட்டும் திருப்தியடையாத நிலையைக் குறித்தும் கூற முடியாத திரளான வேலைகளைக் குறித்தும் அவர்கள் தியானித்தனர். (வசனம் 8). நிலைத்திருந்து தொடர்ந்து செய்யப்படும் காரியங்கள் யாவும் நிலையாக முன் இருந்ததே மீண்டும் மீண்டும் இருக்கின்றன என்றும், இயற்கையில் எவ்விதமான புதிய நூதன விசையும் இல்லாததைக் குறித்துத் தியானித்தனர். (வசனம் 9, 10). தன்னுடைய காலத்திற்கு முன்பு நடந்தவைகளிலிருந்து தனக்கு அனுபவமாக ஒன்றையும் ஒருவரும் நினைக்கிறதில்லை என்ற உண்மையைக் குறித்தும் அவனுடைய காலத்திற்குப்பின் நடக்கப்போகிறவற்றைப் பற்றியும் எவரும் தங்கள் மனதில் கொண்டு வருவதில்லை என்பதைப் பற்றியும் தியானித்தனர். (வசனம். 11).

தேவனுடைய பழைய ஏற்பாட்டு விஷயங்களில் அவருடைய ஜனங்களுக்காக மூப்பரான பாத்திரவான்கள் செயலாற்றும் அதிகாரிகளாக (வசனம். 12) இந்த பூமியின் அறிவு சம்பந்தப்பட்ட காரியங்களை ஆராய விருப்பங்கொண்டனர். அது சோர்வடையக் கூடிய வேலை என்பதைக் கண்டு கொண்டனர். (வசனம் 13). அவர்களின் வெறுமைத் தன்மையைப் பற்றிய ஓர் உணர்வையும் மனதின் திருப்தியற்ற தன்மையையும் (வசனம். 14) மற்றும் மனிதனுடைய வீழ்ச்சியடைந்த நிலையைச் சீர்திருத்த இயலாத நிலையையும் குறைகளை எண்ணி முடியாத நிலையையும் பற்றிய ஓர் புரிந்து கொள்ளுதலை இவைகள் சம்பந்தமாக அவர்களுடைய அனைத்து தியானங்களும், முடிவாகக் கொண்டு வந்தன. (வசனம் 15). அடுத்தடுத்து வந்திருக்கக்கூடிய தங்கள் தலை முறை காலத்தில் தங்களுடைய சொந்த நிலைமையைக் குறித்து சிந்திக்கையில் தங்கள் முன்னோர்களைப் பார்க்கிலும் அவர்களே அதிகம் சிலாக்கியங்களிலும் அறிவிலும் செழிப் பானவர்கள் என்பதையும் தேவனுடைய வார்த்தைக்கு இசைவாக அவர்களுடைய இருதயத்திற்குக் கிடைத்த அனுபவங்களின் விசேஷித்த தன்மையையும் அவர்கள் அங்கீகரித்தனர். (வசனம் 16). சத்தியத்தின் காரியங்களையும் மூடநம்பிக்கை மற்றும் தப்பறையின் காரியங்களையும் சரியாக மதிப்பிடுவதற்கு உண்மையில் அவர்கள் மிகவும் முயற்சி செய்தனர்; இவ்விதமான முயற்சிகள் அநேக மனரீதியான உலைச்சல் களுக்கும், கஷ்டங்களுக்கும் வழி நடத்தின என்று அவர்கள் முடிவு செய்தனர் (வசனம் 17). மேலும் சாபம் சம்பந்தமான காரியத்தில் அதிகமான சத்தியத்தில் அதிகமான வருத்தமும் இருக்கிறதைக் கண்டுகொண்டனர். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், புதிய ஏற்பாட்டு வெளிச்சத்தினால் தெளிவாக்கப்படாத சாபத்தைக் குறித்த தனது அறிவை ஒருவன் பெருக்குவானானால் அது அவனுக்கு மிகப் பெரிய அளவில் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதேயாகும்.

சந்திரனில் அடையாளப்படுத்தப்படும் பழைய ஏற்பாட்டின் ஞானம் மற்றும் அறிவின் பிரதிபலிக்கும் ஒளியானது, சூரியனில் அடையாளப்படுத்தப்படும் புதிய ஏற்பாட்டின் ஞானம் மற்றும் அறிவின் ஒளியை, வெளிச்சத்தைச் சார்ந்தே இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டில் இயேசு மரணத்தைப் பரிகரித்து அதின் சாபத்திலிருந்து நம்மைக் காப்பாற்றி "**அந்தகாரத்தின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு**" நம்மை அழைத்துள்ளார். (1 பேது. 2 : 9; 2 தீமோ. 1 : 9, 10). சுவிசேஷ யுகத்தின்பொழுது சபையானது "**சூரியனை அணிந்திருந்தது. அதன், பாதத்தின் கீழ் சந்திரன் இருந்தது**" (வெளி. 12 : 1 – பழைய ஏற்பாடு நமது விசுவாசத்தின் அஸ்திபாரமாக இருக்கிறது).

நீதிமொழிகளானது ஞானத்தையும் அறிவையும் பற்றி பிரசங்கியில் காணப்படுவதைப் பார்க்கிலும் வேறொரு உயர்ந்த கண்ணோட்டத்தில் தீர்க்கதரிசனமாகப் பேசுகின்றன. "**தேவனுடைய ஞானமானது**" (1 கொரி. 1 : 24) இயேசுவுக்குள் "**ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.**" (கொலோ. 2 : 3; 1 : 19) பல பிரிவுகள் கொண்ட தேவனுடைய அநந்த ஞானமானது இயேசு கிறிஸ்துவின் மூலம் சகல ஞானத்தோடும் ஆவிக்குரிய விவேகத்தோடும் நம்மிடம் வெளிப்படுத்தப்பட்டது. அது நமக்கு விசேஷித்த சந்தோஷத்தைக் கொண்டு வருகிறது. (எபே. 3 : 10; கொலோ. 1 : 9, 10). அவர் நம்மிடம் பேசுகிற வார்த்தைகள் "**ஆவியாயும் ஜீவனாயும்**" இருக்கின்றன. (யோவா. 6 : 63).

இதுவே நீதிமொழிகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஞானமும் அறிவும் ஆகும். இது பிரசங்கியில் குறிப்பிடப் பட்டிருப்பவைகளிலிருந்து வேறுபட்டு இருக்கிறது. உதாரணமாக நீதிமொழிகள் 2 : 1–11 வசனங்களில் தேவனுடைய ஜனங்களின் இந்த விலையேறப்பட்ட சிலாக்கியங்கள் எவ்வளவு அழகாக சித்திரிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பாருங்கள். நாம் கவனக் குறைவாக விட்டுவிடாமல் அதனை வாஞ்சையுடன் நாடித் தேடிப் பெற்றக்கொள்ள வேண்டும். (நீதி. 3 : 13–24; 4 : 5–9; யாக். 1 : 5; 3 : 1–18). நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாக இராமல் நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருகிறபடியால் நாம் அதனை உண்மையில் பொக்கிஷமாகப் பாதுகாப்போமாக. "**இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.**" (2 பேது. 3 : 18; 1 : 8, 11).

***

# கிறிஸ்துவின் சாயலில் வளர்ச்சியடைதல்

**கேள்வி**: ஒருவன் தேவனுடைய முழுமையான அங்கீகாரத்தைப் பெற எந்த அளவுக்குக் கிறிஸ்துவின் குணசாயலை அடைய வேண்டும்?

**பதில்** : *[இந்த கேள்விக்குரிய பதிலானது புது சிருஷ்டிகள் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டதாயிருந்தாலும் நமக்கும் மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.]*

யேகோவா தேவன் பரிபூரணத்திற்கு குறைவான எந்த ஒன்றையும் ஏற்றுக் கொள்ளமாட்டார். நியாயப்பிரமாண ஒழுங்குகளில் இது அடையாளமாக விவரிக்கப்பட்டுள்ளது. (உதாரணமாக லேவி. 22 : 17-25 வசனங்களைப் பார்க்கவும்). இப்பிரகாரமாகவே நாம் முதலில் தேவனிடம் வந்தபொழுது நமது மீட்பராகிய கிறிஸ்துவின் மூலம் வந்தோம். அவரே நமது பிரதான ஆசாரியரும் ஆவார். அவர் தமது நீதியின் வஸ்திரத்தால் நம்மை மூடி "பரிசுத்தமும் ஏற்கத்தகுந்ததுமாக" தேவனுக்கு முன்பாக நம்மை நிறுத்துகிறார். அதில் எவ்வித கண்டனமும் இல்லை. ஏனென்றால் அவருடைய ஈடுபலியின் புண்ணியம் நம்மீது சாட்டப்பட்டிருக்கிறதே. (ரோம. 12 : 1; 8 : 1; 4 : 24; 1 கொரி. 1 : 30) நம்மைக் குறித்து சிந்திக்கையில் இந்த பூமிக்குரிய மண்பாண்டத்தில் பொக்கிஷமாகப் புதிய மனம், புது இருதயம், புது சித்தம் அல்லது புது சிருஷ்டி, "**உள்ளான மனிதனைப்**" பெற்றிருக்கிறோம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (ரோம. 7 : 22; 2 கொரி. 4 : 7; 16; எபே. 3 : 16). இந்த "**உள்ளான மனிதனே**" கிறிஸ்துவின் சாயலை நிச்சயமாகக் கொண்டிருக்க வேண்டும்.

நம்முடைய விழுந்துபோன மாம்சத்தில் "**நன்மை வாசஞ் செய்வதில்லை.**" (ரோம. 7 : 18). உலகமும், மாம்சமும், பிசாசும் நம்மை எப்பொழுதும் சூழ்ந்து கொள்கிறது. இவைகள் அனைத்தும் நமது புதிய மனம் இருதயம் சித்தம் அல்லது புது சிருஷ்டியை பழைய சரீரத்தில் பரிபூரணமாக வேலை செய்யவிடாமல் தடை செய்ய முயற்சிக்கின்றன. தேவனுடைய சித்தத்தைச் செய்ய வேண்டுமென்ற புதிய சித்தமானது பரிபூரணத்திற்கு குறைவாக நிச்சயம் இருக்கக் கூடாது. இயேசு கூறியது போல "**இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.**" (மத். 5 : 8) இருதய சுத்தம் நிச்சயம் முழுமையானதாக (பூரணமானதாக) இருக்க வேண்டும். நாம் "எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்." நீதி. 4 : 23. நாம் தேவனுக்கு நன்றி கூறவேண்டும். ஏனென்றால் "**மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்.**" 1 சாமு. 16 : 7.

எவர்களுடைய விருப்பங்கள் சுத்தமாக இருக்கின்றதோ, எவர்களுடைய நோக்கங்கள் சுத்தமாக இருக்கின்றதோ, எவர்கள் மிகச் சிறந்த ஒன்றிற்காக வாஞ்சித்து காத்திருப்பார்களோ அவர்களே இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள். இவர்கள் தேவனிடமும், அவர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிற மகிமையான காரியங்கள் சம்பந்தமாகவும் முழு நம்பிக்கையும் திடமான சமாதானமும் கொண்டவர்களாக இருப்பார்கள். ஏனெனில் இவர்களால் இந்த சாகக் கூடிய சரீரத்தில் தங்களால் இயன்ற மட்டும் சிறப்பாகச் செய்தனர். அதற்குமேல் அவர்களால் செய்ய முடியாது. இவ்வாறாக தங்களால் இயன்றமட்டும் சிறப்பாகச் செய்து தங்களுடைய பக்தியைக் காட்டுகிறார்கள்.

ஓர் தேர்ந்த வயலின் (Violin) வித்துவானாக, கலைஞனாக ஆக வேண்டும் என்று மிகவும் ஊக்கமான விருப்பம் கொண்ட ஓர் சிறுவனைக் குறித்து ஞாபகப்படுத்துகிறோம். அந்த சிறுவனுடைய தகப்பனார் அவனுக்கு மிகவும் தரம் குறைந்த வயலின் ஒன்றையும், அதற்கு தேவையான ஆலோசனைக் குறிப்புகளையும் மற்றும் அவனுடைய பயிற்சிக்குத் தேவையானவற்றையும் வாங்கிக் கொடுத்தார். அந்த சிறுவன் ஒவ்வொரு நாளும் ஜாக்கிரதையாகப் பயிற்சி செய்தான். அவ்வாறு பயிற்சி செய்கையில் தன்னால் ஓர் நல்ல தரமான இசையை உருவாக்க முடியவில்லையே என மிகவும் வருந்தினான். இந்த பழைய உடைந்த வயலினை வைத்து ஓர் பூரணமான இசையை உருவாக்குவது கூடாத காரியம் என தன் தகப்பனிடம் கூறினான். "அதை நானும் அறிவேன்" என்று அந்த தகப்பனார் பதிலளித்தார். மேலும் அவர் கூறியதாவது: "இந்த தரம் குறைந்த வயலினானது நீ பழகுவதற்குப் போதுமானதாக இருக்கும். இதனை வாசிப்பதற்கு நீ நன்கு கற்றுக் கொண்டால் நீ விரைவில் சிறந்த இசைக் கலைஞனாக ஆகி விடுவாய். அப்பொழுது நான் நல்ல தரமான பூரணமான சிறந்த புதிய வயலினை உனக்கு வாங்கிக் கொடுப்பேன். அப்பொழுது சிறந்த பூரணமான இசையை இசைக்க, உருவாக்க உன்னால் முடியும்" என்று அந்த சிறுவனுடைய தகப்பனார் அவனிடம் கூறினார்.

நம் விஷயத்திலும் அப்படியேதான். நாமும் நமது பழைய சரீரங்களைக் கொண்டு பூரணமானவற்றைச் செய்ய முடியாது. கிறிஸ்துவின் சாயலில் நாம் நம்மையே பரிபூரணர்களாக ஆக பயிற்சி செய்வதற்கு நம்முடைய இந்த அபூரணமான சரீரங்கள் தேவையாக இருக்கின்றன. விரைவில் உயிர்த் தெழுதலில் நாம் புதிய சரீரங்களைப் பெறுவோம். அப்பொழுது தான் நம்மால் பூரண இசையை இசைக்க உருவாக்க முடியும். இப்பொழுதுதோ "**விருப்பம் என்னிடத்திலிருக்கிறது: நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை.**" (ரோம. 7 : 18). இப்பொழுது கர்த்தருக்கு நம் இருதயத்தில் இனிய இசையை இசைக்கிறோம் (உருவாக்குகிறோம்). (எபே. 5 : 19). பழைய (அபூரண) சரீரத்தை ஒடுக்கி அதனைக் கீழ்ப்படுத்துவதற்கு நாம் அதனோடு போராடுகிறோம். (1 கொரி. 9 : 27). ஆனால் அதுவோ தொடர்ந்து கிரீச்சென்று சப்தம் எழுப்பிக் கொண்டே இசைவில்லாத ராகத்தை இசையை உண்டாக்குகிறது. ஆனால் தேவன் நமக்குப் புதிய பரிபூரண சரீரங்களைக் கொடுக்கும் பொழுது ஒவ்வொரு காரியத்தையும் பரிபூரணமாக செய்வதற்கு நம்மால் இயலும். நாம் சிறந்த இசைக் கலைஞர்களாக இருதயத்தின் உள்ளான மனிதனில் ஆகும்போது நமக்குப் புதிய பூரண சரீரங்களை அவர் அருளுவார். ***

"**உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு: அவர்களுக்கு இடறலில்லை.**" **சங். 119 : 165**

# தேவன் துண்டுப்பிரதிகளைப் பயன்படுத்துகிறார் - நீங்கள் பயன்படுத்துகிறீர்களா?

***God Uses Tracts - Do you?*** **(BS 554, Page 39)**

மாலுமி ஒருவர் தனது நீண்ட பயணத்தின்போது எவ்வாறு ஒரு துண்டுப்பிரதியின் (Tracts) மூலமாக அவர் கிறிஸ்துவிடம் வந்தார் என்பதைப் பற்றிக் கூறினார். உணவகம் ஒன்றில் சர்வராக பணி புரிந்த ஒரு இளம்பெண் தன் அறையில் தனிமையில் இருந்தபோது அவளுக்கென உதாரத்துவமாய் கொடுக்கப்பட்ட ஒரு சிறு தொகையுடன் ஒரு துண்டுப்பிரதியும் வைக்கப்பட்டிருந்ததைக் கண்டாள். அந்த துண்டுப்பிரதியைப் படித்ததின் மூலமாக கிறிஸ்துவைத் தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டாள். அஞ்சல் வாயிலாக அனுப்பப்பட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தைத் தேவன் பயன்படுத்தி ஓர் வயதான பெண் மணியை இரட்சகரிடமும் தம்முடைய சத்தியத்தினிடத்திற்கும் வழிநடத்தினார். தேவன் துண்டுப்பிரதிகளைப் (Tracts) பயன்படுத்துகிறார்! நீங்கள் பயன்படுத்துகிறீர்களா?

"***சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி***" என்று கூறப்பட்டுள்ளது. (மாற். 16 : 15). நீங்கள் அதனைச் செய்கிறீர்களா? நீங்கள் சந்திக்கும் ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் சாட்சிசொல்ல உங்களுக்குப் போதுமான நேரமோ தைரியமோ இல்லாமலிருக்கலாம். ஆனால் துண்டுப் பிரதிகள் மூலமாக எளிதாக சாட்சி சொல்லலாம். இங்கே துண்டுப் பிரதிகளை எப்படி கொடுக்கலாம் என்பதற்கான சில யதார்த்த மான அணுகு முறைகள் கொடுக்கப்பட்டுள்ள. 'பி' "P" என்ற ஆங்கில எழுத்தில் ஆரம்பிக்கும் இவற்றை மனதில் கொண்டு துண்டுப்பிரதிகளைக் கொடுக்கவும்:

**1. ஜெபத்துடன் கொடுக்கவும்:** (Prayerfully) – நிச்சயமாக எச்செயலாயினும் ஜெபத்துடன் தான் செய்யப்பட வேண்டும். துண்டுப்பிரதிகளைக் கொடுக்கும்பொழுதும் இது நிச்சயமாகவே உண்மையென்று விளங்குகிறது. துண்டுப்பிரதியிலுள்ள வார்த்தையின் மூலமாய் தேவனும் கிறிஸ்துவும் துண்டுப் பிரதியைப் பெற்றுக் கொள்பவரின் இருதயத்துடன் பேசி அவர்கள் ஆயத்தமாக இருப்பின் அவர்களின் மனக்கண்களைத் திறக்க அவர்களுக்காக ஜெபிக்கவும். அதனால் அந்த நபர் சுவிசேஷத் தின் முழு செய்தியையும் ஏற்றுக்கொள்ளக் கூடும்.

**2. மரியாதையான முறையில் கொடுக்கவும்:** (Politely)- மரியாதையற்ற முறையிலோ அல்லது அநாகரீகமாகவோ தேவையற்ற வகையில் எதிர்த்து விவேகமற்றவர்களாய் பிறரைப் புண்படுத்தும் விதத்திலான பாவனையிலோ இருக்க வேண்டாம். சுவிசேஷம் என்பது எதிர்க்கிறதாய் இருந்தால் அது முற்றிலும் வேறொரு விஷயமாகும். ஆனால் துண்டுப்பிரதியைக் கொடுக்கும் ஆணோ பெண்ணோ எதிர்த்துதாக்கி வருத்தப் படுத்துகிறவர்களாயிருந்தால், அது ஒரு பாவமாகும்.

**3. புன்னகையுடன் கொடுக்கவும்:** (Pleasantly) – புன்னகைப் பதற்கு ஒரு கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை; ஆனால் புன்னகையானது வெகுதூரம் செல்லக்கூடியதொன்றாகும். உங்கள் இருதயத்திலும் குரலிலும் பிறர்மீது அன்புள்ளவர் களாய், முகத்தில் ஓர் புன்சிரிப்புடன், "நீங்கள் விசேஷமான ஒன்றை வாசிக்க விரும்புகிறீர்களா?" என்று கேட்கலாம். ஒரு நபர் அதனை வாங்குவதற்கு மறுத்தால் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால் வேறு பலர் நம் துண்டுப் பிரதிகளை வாங்கிக்கொள்வார்கள் என்பதையே. அல்லது வேறு சிலர் வாக்குவாதம் செய்ய வந்தாலும் நாம் புன்னகையுடனேயே காணப்பட வேண்டும். வாக்குவாதம் பண்ண வேண்டாம்; கிறிஸ்துவின் ஆவியை உபயோகிக்கவும். (ரோம. 8 : 9).

**4. அதிகமாகக் கொடுக்கவும்:** (Plentifully) - "**பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்**" (2 கொரி. 9 : 6). மற்றவை களைக் காட்டிலும் துண்டுப்பிரதிகளின் விலையானது மிகவும் குறைவானதாகும். (நாங்கள் அவைகளை இலவசமாகவும் வழங்குகிறோம்; பணம் செலுத்தியும் பெற்றுக்கொள்ளலாம்). ஆகையால் யார் வேண்டுமானாலும் இதனை இலவசமாகக் கொடுக்கலாம்.

**5. விடாமுயற்சியுடன் கொடுக்கவும்:** (Persistently) - "**நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**" (கலா. 6 : 9). கண்டு நடக்கிறவர்களாய் இராமல், விசுவாசத்தில் நடக்கிறவர்களாய் இருப்போம். சிலர் விடாமுயற்சியைக் கைக்கொண்டதினால் மாபெரும் பலன்களைக் கண்டுள்ளனர்.

**6. யதார்த்தமான நடைமுறையில் கொடுக்கவும்:** (Practically) - தேவன் திடீரென தெருவிலே உங்களை நிறுத்தி உங்களிடம், "இதோ, இந்த நபருக்குத் துண்டுப்பிரதியைக் கொடு," என்றோ அல்லது, "பொறு! அந்த நபருக்கு துண்டுப் பிரதியைக் கொடுக்க வேண்டாம்" என்றோ சொல்வார் என நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். யார் ஏற்றுக் கொள்வார்கள் என்பது நமக்குத் தெரியாது. (தெய்வீக சத்தியத்தின் பரிசுத்த முத் துக்களை இரண்டு வகுப்பாரிடம் மட்டுமே நாம் கொடுக்கக்கூடாது என்று இயேசு கூறினார். அவர்கள் யாரென்றால் – வகுப்பு வாத உணர்வின் காரணத்தால் வாக்குவாதம் செய்ய விரும்பி நம்மை நோக்கி உருமவும் கடிக்கவும் வருபவர்களிடமும், விருப்பத்துடன் பாவச் சாக்கடையில் அமிழ்ந்திருப்போரிடமும் சத்தியத்தின் பரிசுத்த முத்துக்களைக் கொடுக்க வேண்டாம் எனக் கூறினார் – மத். 7 : 6). உங்களிடம் ஒரே ஒரு துண்டுப் பிரதியையாவது வைத்திருப்பீர்களா? நம்முடைய வாய்ப் புகளை நாம் பயன்படுத்திக்கொள்ள எப்பொழுதும்

யதார்த்தமாகவும் நடைமுறைக்கு உகந்ததாயும், துண்டுப் பிரதிகளை உடையவர்களாய் தயாரான நிலையிலிருக்க வேண்டும் என தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். துண்டுப் பிரதிகளைக் கடிதத்திலும், வாழ்த்து அட்டைகளிலும் ரசீதுகளிலும் வைத்துக் கொடுக்கவும். உங்கள் வீட்டு வாசலுக்கு வரும் குமஸ் தாக்களுக்கும், சர்வர்களுக்கும், விற்பனைப் பிரதிநிதிகளுக்கும் மற்றும் எல்லோருக்கும் கொடுக்கவும். தெருக்களிலும் பொது இடங்களிலுமுள்ள மக்களிடம் நீட்டவும். மக்கள் பார்த்து எடுக்கக்கூடிய எல்லா ஏற்புடைய இடங்களிலும் துண்டுப் பிரசுரங்களை வைக்கவும். தனியாகவோ அல்லது ஒரு குழு வாகவோ சென்று பேருந்து மற்றும் இரயில் நிலையங்களிலும், வானூர்தி நிலையங்களிலும், பல்பொருள் அங்காடிகளிலும், கார்கள் நிறுத்துமிடங்கள் முதலிய இடங்களில் துண்டுப் பிரதிகளைக் கொடுக்கவும். தனியாகவோ அல்லது குழுவாகவோ எல்லா குடும்பங்களையும் சந்திக்க ஒவ்வொரு வீடு வீடாகச் செல்லவும். மருத்துவர்கள் துண்டுப்பிரதிகளை அறிக்கையிலும், மருந்துச் சீட்டுகளோடும், வர்த்தகர்கள் துண்டுப்பிரதிகளை கடிதங்களிலும், கடை முதலாளிகள் துண்டுப்பிரதிகளைப் பொருட்களை எடுத்துச் செல்லும் உறைகளிலும் போடலாம். துண்டுப்பிரதிகளை வைக்கக்கூடிய அடுக்குத் தட்டுகளை கடைகளிலும், மருத்துவமனைகளிலும், காத்திருக்கும் அறைகள் முதலியவற்றில் பலன்கொடுக்கும் வகையில் வைக்கலாம். துண்டுப்பிரசுரங்களைக் கொடுக்க பல புதிய வழிமுறை களுக்காக விழித்திருந்து ஜெபிக்கவும்.

**7. சுயமாகச் செய்யவும்:** (Personally) - துண்டுப்பிரதியின் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால் வாலிபரோ, வயோதிபரோ, படித்தவரோ, படியாதவரோ, ஏழையோ, பணக்காரரோ, பயந்த சுபாவமுடையவரோ, தைரியசாலியோ, யாராயிருந்தாலும் துண்டுப்பிரதியைப் பயன்படுத்தலாம். தேவாலயத்திற்கு வராதவர் கள் கூட தனிமையில் காலையிலோ இரவிலோ பொதுவாக துண்டுப்பிரதிகளைப் படிப்பதுண்டு. துண்டுப்பிரதிகள் வீடுகள், மருத்துவமனைகள், சிறைச்சாலைகள் முதலிய இடங்களுக்கு எந்நேரத்திலும் எளிதாகச் செல்லக் கூடியவை ஆகும். சமயலறையிலும், கடைகளிலும், அழகுப்படுத்தும் நிலையங் களிலும், பட்டறைகளிலும், நெடுஞ்சாலைகளிலும், இரயிலிலும், வானூர்திகள் முதலிய எவ்விடத்திலும் அவைகளால் தேவனின் சத்தியத்தைக் குறித்த செய்தியினைச் சொல்ல முடியும். சத்தியத்தின் நற்செய்தியால் தொடப்படாதவர்கள் சிறிதளவு விலையோ அல்லது விலையே இல்லாத துண்டுப்பிரதிகள் மூலம் சந்திக்கப்படுகிறார்கள். துண்டுப்பிரதிகள் பயம், சோர்வு, பரிகாசம், ஆகடியம், புறங்கூறுதல் ஆகியவற்றை அறிவ தில்லை. அவைகளால் நற்செய்தியை மறுபடியும் மறுபடியும் கூற முடியும்.

**8. வாய்ப்புக்கான எதிர்பார்ப்புடன் கொடுக்கவும்:** (Prospectively)- துண்டுப்பிரதிகளின் மிகவும் சிறந்த மதிப்புகளில் ஒன்று என்னவென்றால் அது சத்தியத்தைச் சாட்சி கொடுப் பதற்கான வாசலை இலகுவாகத் திறக்கிறது. துண்டுப்பிரதியை சாட்சிக்கான கருவியாக பயன்படுத்தவும். மாறாக தனிப்பட்ட முறையில் மற்றவர்களுக்கு சாட்சி சொல்லாமலிருக்க ஒரு சாக்காக அதனைப் பயன்படுத்த வேண்டாம். துண்டுப்பிரதியை ஒருவர் படித்து முடித்தப் பிறகு அந்த நபருடன் வாய்ப்பு கிடைத்தால் மேலும் சத்தியத்தைப் பேசி சாட்சி கூறவும்.

**9. இப்பொழுதே கொடுக்கவும்:** (Presently) - தாமதம் வேண்டாம். இன்றே வேலையைத் தொடங்கவும். துண்டுப்பிரதி களை வாங்கி அவற்றை எப்பொழுதும் உங்களுடன் சுமந்துச்செல்ல நினையுங்கள். உங்களிடம் துண்டுப்பிரதிகள் இல்லையென்றால் நீங்கள் அவைகளைக் கொடுப்பதற்கு தூண்டப்படுவது இயலாத காரியமாகும்.

**10. உபயோகமான நோக்கத்துடன் கொடுக்கவும்:** (Purposefully) - நீங்கள் சபை கூடும் இடத்தின் முகவரியையோ அல்லது உங்களுடைய விலாசத்தையோ துண்டுப்பிரதியில் பதித்தால் நலமானது. அதனைப் பெற்றவர் உங்களைத் தொடர்பு கொள்ள உதவும். விசேஷ கூட்டங்கள், வானொலி அல்லது தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் சத்திய நிகழ்ச்சிகளைப் பற்றி அதில் குறிப்பிடவும். ***

## துண்டுப்பிரதி ஊழிய வாய்ப்பு

**சத்திய சகோதரர்களில் அநேகர் இந்த Tracts ஊழியத்தைக் கருத்தாய் செய்து வருகிறார்கள். அதன் மூலம் ஆசீர்வாதத்தைப் பெற்று மற்றவர்களும் ஆசீர்வாதத்தைப் பெற உதவுகிறார்கள்.**

**இந்தப் பாடத்தை வாசித்தபின் வாசகர்கள் யாராவது Tracts ஊழியத்தில் ஈடுபட விரும்பினால் கீழ்காணும் விலாசத்தில் எங்களை தொடர்பு கொள்ளும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

**'துண்டுப்பிரதிகளை இலவசமாக அனுப்பித்தருகிறோம்'**

**- L.H.M.M.**

Visit us at : **www.biblestandardindia.com**


*For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact :*

*Bro. V. Vincent Jeyakumar*

*Laymen's Home Missionary Movement*

32-D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent.v31@gmail.com
Cell : 98949 26629



FOR PRIVATE CIRCULATION ONLY